பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
24 10 2025 FRIDAY 7 15 AM
ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கல்வி மற்றும் அறிவாற்றலில் நாட்டின் முன்னணி மாநிலமாக கேரளா திகழ்கிறது என்று குடியரசுத்தலைவர் திருமதி.திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. வளர்ச்சிப் பணிகளை விரைவாக மேற்கொள்ள மத்தியிலும், மாநிலத்திலும் நிலையான ஆட்சி நடைபெற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

3. நாடு முழுவதும் 10 கோடி ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு.மனோகர் லால் கூறியுள்ளார்.

4. அமெரிக்காவின் பொருளாதார தடைகளால், ரஷ்யாவிற்கு பாதிப்பு ஏற்படாது என்று அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

கல்வி மற்றும் அறிவாற்றலில் சிறந்து விளங்குவதால், மனிதவள மேம்பாட்டில், நாட்டின் முன்னணி மாநிலமாக கேரளா திகழ்கிறது என்று, குடியரசுத்தலைவர் திருமதி.திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

கோட்டயம் மாவட்டம் Pala நகரில், தனியார் கல்லூரி விழாவில் பேசிய அவர், இந்த நூற்றாண்டு, அறிவாற்றல் நூற்றாண்டாக கருதப்படுவதாக தெரிவித்தார்.

அறிவாற்றல் தான், சமுதாய முன்னேற்றத்திற்கும், சுயசார்புக்கும் வழிவகுப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கோட்டயம் அருகேயுள்ள சிறிய கிராமத்தில், சாதாரண குடும்பத்தில் பிறந்த கே.ஆர்.நாராயணன், அவரது அறிவாற்றல் காரணமாக, குடியரசுத்தலைவர் பதவி வரை உயர்ந்ததையும் திருமதி. திரௌபதி முர்மு சுட்டிக்காட்டினார்.

தமது பயணத்தின் கடைசி நாளான இன்று, எர்ணாகுளத்தில் நடைபெறும் கல்லூரி விழாவில் பங்கேற்ற பின், குடியரசுத்தலைவர் புதுதில்லி திரும்புகிறார்

>>>>>><<<<<<

இளைஞர்கள், அறிவியல் துறை வேலைவாய்ப்புகளை நாடும் அளவிற்கு, உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியில், பாரம்பரிய நெறிமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று தம்மை சந்தித்த, மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் மற்றும் உயரதிகாரிகளிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

புதுமைக் கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளும் நாடுகளின் பட்டியலில், 2015ம் ஆண்டு 81-வது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது 38-வது இடத்திற்கு முன்னேறி உள்ளதற்கும், குடியரசு துணைத்தலைவர் பாராட்டுத் தெரிவித்தார்.

வானிலை முன்னறிவிப்பில் ஏற்பட்டுள்ள வேகமான முன்னேற்றத்தை சுட்டிக்காட்டிய திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், நாட்டின் நீலப் பொருளாதார வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

வளர்ச்சிப் பணிகளை விரைவாக மேற்கொள்ள மத்தியிலும், மாநிலத்திலும் நிலையான ஆட்சி நடைபெறுவது அவசியம் என்று பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, அம்மாநிலத்தைச் சேர்ந்த பி.ஜே.பி. வாக்குச்சாவடி முகவர்களுடன் கலந்துரையாடிய அவர், மத்தியிலும், பீகாரிலும் நிலையான அரசுகள் இருப்பதால், வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

நாட்டின் விரைவான வளர்ச்சிப் பயணத்தில், பீகார் பீடுநடை போடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பீகார் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை, எத்தகைய சவாலையும் எதிர்கொள்ளும் திறனும், வலிமையும் இந்தியாவிற்கு உள்ளது என்பதை உலகிற்கு உணர்த்தியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கடற்படை கமாண்டர்கள் மாநாட்டில் பேசிய அவர். கடற்படையின் செயல்பாடுகளால் பாகிஸ்தான் அச்சமடைந்திருப்பதாக கூறினார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் நமது கடற்படையின் செயல்பாடுகள் நட்பு நாடுகளுக்கு உதவிகரமாக உள்ளது என்றும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

நாடு முழுவதும் 10 கோடி ஸ்மார்ட் மீட்டர்களைப் பொருத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு.மனோகர் லால் கூறியுள்ளார்.

அரியானா மாநிலம் ரோடக்கில் செய்தியாளர்களை சந்தித்த அவர், இதுவரை ஒரு கோடி ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இத்தகைய மீட்டர்களைப் பொருத்துவதன் மூலம், நுகர்வோரின் குறைகளுக்கு எளிதில் தீர்வுகாண்பதோடு, நுகர்வோர் மின்சாரத்தை சேமிக்க உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மெட்ரோ ரயில் தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த திரு. மனோகர் லால், நாடு முழுவதும் 24 நகரங்களில், இதுவரை ஆயிரத்து 100 கிலோமீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ரஷ்யாவின் எண்ணெய் நிறுவனங்களுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகளால், பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.

மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுயமரியாதை உள்ள எந்த நாடும் அந்நிய நிர்பந்தங்களுக்கு அடிபணியாது என்று தெரிவித்தார்.

அமெரிக்காவின் சமீபத்திய தடை நடவடிக்கைகள் ரஷ்ய பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றாலும். அதனால் பெரிய அளவிலான விளைவுகள் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் திரு. விளாடிமிர் புட்டின் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

இந்தியா - அமெரிக்கா இடையேயான தடையற்ற வர்த்தக பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

தூர்தர்ஷன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், இரு நாடுகளும் பேச்சுவார்த்தையில் தீவிர கவனம் செலுத்தி வருவதாக கூறினார்.

இந்த பேச்சுவார்த்தையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல இருநாட்டு குழுவினரும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விரைவில் உடன்படிக்கை ஏற்படும் என்றும் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இந்தியா - பூடான் இடையேயான ராணுவ ஒத்துழைப்பு மற்றும் எல்லைப்புற மேலாண்மை பிரச்சினைகள் குறித்து, இரு நாடுகளும் ஆலோசனை நடத்தியுள்ளன.

திம்புவில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இந்தியா – பூடான் எல்லையில், எல்லைக்கற்கள் நடுவது மற்றும் ஊடுருவல் தடுப்பு குறித்தும் விவாதிக்கப்பட்டதாக, மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளிடையேயான நட்புறவை வலுப்படுத்துவதுடன், இருதரப்பு ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துவது குறித்தும் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தை, பாதுகாப்பான மற்றும் வளமானதாக மாற்ற தொடர்ந்து பணியாற்றவும் இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.

இந்தக் கூட்டத்தில், இந்தியாவின் சார்பில், உள்துறை அமைச்சகத்தின் எல்லைப்புற மேலாண்மைத் துறை செயலாளர் திரு. ராஜேந்திர குமார் தலைமையிலான குழு பங்கேற்றது.

>>>>>><<<<<<

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்திற்கான இலச்சினை வடிவமைப்பு, போட்டிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை, அடுத்த மாதம் 5-ந் தேதிக்குள், mygov இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்கலாம்.

போட்டியில் வெற்றிபெறுவோருக்கு, ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்.

இந்த இலச்சினை, பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின் குறிக்கோளை வெளிப்படுத்துவதாகவும், பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியில் சுயசார்பு அடைவதோடு, இத்துறையில் இந்தியாவை உலகளாவிய மையமாக மாற்றும் வகையிலும் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் கபடி பிரிவில் இந்தியா தங்கம் வென்றது.

மகளிர் 100 மீட்டர் தடை ஓட்டத்தில் Shourya Avinash வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் குண்டு எறிதல் பிரிவில் Jasmine Kaur வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Priya Malik வெண்கலப்பதக்கம் வென்றார்.

செர்பியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் ஆடவர் பிரிவிலும், தியா சிட்டாலே மகளிர் பிரிவிலும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரனய் சேத் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-19, 21-16 என்ற செட்கணக்கில் அபிஜித்தை வென்றார்.

>>>>>><<<<<<

ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Anvi Rathore* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*15* வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், *21-15, 21-12* என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் *Kalia Rahmadani*-யை வென்றார்.

*>>>>>>><<<<<<*

உலக கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா *53* ரன் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வென்று, அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

*>>>>>>><<<<<<*

வியன்னா ஓப்பன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யூகி பாம்ப்ரி - ஸ்வீடனின் *Andre Goransson* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*24 10 2025* *7 15* விளையாட்டுச் செய்திகள்-*4*

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை *3-6, 6-1, 10-8* என்ற செட்கணக்கில் ஆஸ்திரியாவின் *Neil – Joel* இணையை வென்றது.

*>>>>>>end<<<<<<*